மானியக் குழு ரூ. 24.7 லட்சமும், தமிழக அரசு ரூ. 8.25 லட்சமும் தர வேண்டும். ஆக மொத்தம் தமிழக அரசு இந்த மூன்று திட்டத்திற்கும் ரூ. 20 லட்சம் தர வேண்டும். அதில் ரூ. 17.5 லட்சம் தந்திருக்கிறது. ஆனால் மாணவர் விடுதி கட்டுவதற்கு மானியக் குழுவின் நிதி இன்னும் வந்து சேராத காரணத்தினால், நாம் இன்னும் அந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கவில்லை. அவர்கள் சொன்னபடி கட்டிடக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மானியக் குழுவின் நிதி வந்தவுடன் அந்தக் கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் மொழிக்காக என்று ஒரு பல்கலைக் கழகம் இல்லை. தமிழகத்திலே தான் முதன் முதலில் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மொழிக்காக ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பித்தாலும், அப்படி ஆரம்பித்து பத்தாண்டுகளாகியும் விடுதி இல்லை. விடுதியில்லாமல் மாணவர்கள் தங்கி ஆராய்ச்சிகளை நல்ல முறையில் செய்வதற்கு உடனடியாக அந்த வேலைகளை அரசு துவங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகம் தவிர வேறு பல்கலைக்கழகம் இல்லை என்று சொல்வது சரியல்ல. ஆந்திரப் பிரதேசத்திலே தெலுங்குப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அதே போல சமஸ்கிருதத்திற்கும் பல்கலைக் கழகம் இருக்கிறது. ஆகவே இல்லையென்று சொல்லிவிட முடியாது. வேறு மொழிகளுக்கும் பல்கலைக் கழகங்கள் இருக்கலாம். அது பற்றிய தகவல்கள் என்னிடம் இல்லை. கட்டிடம் கட்டுவதைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதி வந்தவுடன் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 27, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

27—

அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றுதல்.

*9555 — திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் உள்ள அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பொதுமக்கள் விருப்பப்படி அதனைத் தவிர்த்து தொடர்ந்து கீழக்கரையில் அரசு மருத்துவமனையாக இயங்கும் வகையில் முடிவெடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புளாணி ஒன்றியம், கீழக்கரையில் தற்போது வட்டமில்லா (Non Taluk Hospital) மருத்துவமனை உள்ளது. அதை சமுதாய நல நிலையமாக மாற்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இது குறித்து ஆணை விரைவில் வெளியிடப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழக்கரை ஒரு வட்ட அலுவலகம் இல்லாத நகராக இருக்கலாம். ஆனால் 50,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய நகரம். அதை நகராட்சியாக உயர்த்துவதாக அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் அங்கே பல ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட அரசு மருத்துவமனை ஒன்றுதான் இருக்கிறது. ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்பது போல இருக்கிற அரசு மருத்துவமனை அது. எங்கள் இதய தெய்வம் ஆட்சியில் அந்த மருத்துவமனையை இன்னும் பல படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனையாக உயர்த்தினால் பெருமையாக இருக்கும். அதனை விடுத்து, அதனை டிகிரேட் செய்வது போல், ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றினால், அங்கே தனவந்தர்கள் மத்தியில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்கு இருக்கிற ஒரே வசதியும் போய்விடும். அதனால் அந்த அரசு மருத்துவமனையின் சேவை தொடர்ந்து அந்த மக்களுக்குக் கிடைக்காது. அதை மக்கள் சிறப்பாகப் பயன்படுத்துகிற வகையில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் அரசு மருத்துவமனையாகத் தொடர்ந்து செயல்பட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 50 படுக்கைகள் அந்த மருத்துவமனையில் இருக்கின்றன. இப்போது சமுதாய நல நிலையமாக மாற்றுகிற போது அந்தப் படுக்கை வசதிகள் எக்காரணத்தைக் கொண்டும் குறைக்கப்பட மாட்டாது. அந்த வகையில்தான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களால் தொடர்ந்து அது அரசு மருத்துவமனையாக இருக்க வேண்டுமென்ற செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே

மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைப் போல தமிழக அரசு—புரட்சித் தலைவியின் அரசு தொடர்ந்து அரசு மருத்துவ மனையாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

28—

மதுரை மருத்துவக் கல்லூரியில் 'எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்' பயன்படுத்துதல்.

*9671—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் ரூ. 60 லட்சம் மதிப்புள்ள 'எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்' (Electron Microscope) பயன்படுத்தப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பயன்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய நபர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப் பட்டபின் முழுவதுமாக இக்கருவி பயன்படுத்தப்படும்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரான் மைக்ராஸ்கோப் 1987-ல் வாங்கப்பட்டும் இன்றுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இந்த எலக்ட்ரான்மைக்ராஸ்கோப் அதிக சக்திவாய்ந்த மைக்ரோஸ் கோப். நமது மாநிலத்தில் முதன்முதலில் மதுரை மருத்துவக் கல்லூரியில் தான் வாங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய மாக்னி பிகேஷன் டைம் என்று சொல்லக்கூடிய அளவு 8.2 லட்சம் மடங்கு பெரிதாக்கிக் காட்டக்கூடிய சக்தி வாய்ந்த மைக்ரோஸ் கோப் ஆக இது இருக்கிறது. வேறு பல இடங்களில் இருக்கிற மைக்ரோஸ்கோப்புகள் பல ஆயிரம் மடங்கு தான் பெரிதாக்கிக் காட்டும். 3 நாட்களில் பிற கருவிகள் மூலம் கண்டுபிடிக்கக்கூடிய